திருவிளையாடற் புராணம்

ஆடலுக்கு ஆட்படுவோம் (பகுதி – 16)

1. மதுரைக் காண்டம்

7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

உலகம் மக்கள் எல்லோரும் ஒன்றாய் நன்றாய் வாழ்வதற்காகச் சூரியகோடிப் பிரகாசமான சிவபெருமான் சுந்தரபாண்டியனாகத் தோன்றிச் சந்திர குலத்தில் தோன்றிய **மலயத்துவச பாண்டியனின் மகளான** உமாதேவியை மதுரையில் திருக்கல்யாணம் செய்து கொண்டார். **கல்யாணம்** என்பது இரு உள்ளங்களையும் உடல்களையும் இணைக்கும் மங்கலகரமான நற்செயல் ஆகும். பார்வதி பரமேசுவரரின் திருமணக் கோலத்தைச் சிந்திப்பதாலும், தரிசிப்பதாலும் **சர்வ மங்கலமும்** உண்டாகும், நலந்தரும் நல்லனவற்றையெல்லாம் நல்கும் திருவிளையாடல் புராணக் கதைகளைத் தொடர்ந்து சிந்திக்கும் பெரும் பேற்றினை நமது கோவிலூர் குருமகா சந்நிதானம் அவர்கள் திருவருளால் நாமும் பெற்றுள்ளோம்.

அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் சித்திரையில் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

அரசர்களுக்கெல்லாம் அரசாட்சி செய்து காண்பித்தல்

எண்ணற்ற பாண்டி மன்னர்கள் அரசாண்டுள்ளனர். அவர்களுள் தலையானவன் மலயத்துவச பாண்டியன். இவனது ஒரே மகளுக்குத் திருமணம். திருமண ஓலை (பத்திரிகை) பெற்ற அனைத்து அரசர்களும் மிகுந்த மனமகிழ்ச்சியுடன் திருமணத்தில் கலந்து கொண்டனர்.

1) கொங்கு நாட்டரசரும், 2) சிங்கள நாட்டரசரும், 3) பல்லவ நாட்டரசரும், 4) விற்கொடியை உடைய சேர(கேரள) அரசரும், 5) கோசல நாட்டரசரும், 6) பாஞ்சால நாட்டரசரும், 7) வங்க நாட்டரசரும், 8) சோனக நாட்டரசரும், 9)சீன நாட்டரசரும், 10) சாளுவ நாட்டரசரும், 11) மாளவ நாட்டரசரும், 12) காம்போச[1] நாட்டரசரும், 13) அங்க நாட்டரசரும், 14) மகத நாட்டரசரும், 15) ஆரிய நாட்டரசரும், 16) நேரி மலையையுடைய

---

[1] *காம்போஜர்கள் (Kambojas) எனும் இனக் குழுக்கள் குறித்து பண்டைய சமசுகிருதம் மற்றும் பாளி இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளது. காம்போஜர்கள் ஆண்ட காம்போஜம் எனும் நாடு, காந்தாரதேசத்திற்கு அருகே அமைந்தது. இன்றைய ஆப்கான தேசத்தின் தலைநகரான காபூல் காம்போஜர்களின் தலைநகராக இருந்துள்ளது.*

சோழ அரசரும், 17) அவந்தி நாட்டரசரும், 18) விதர்ப்ப நாட்டரசரும், 19) கங்க நாட்டரசரும், 20) கொங்கண நாட்டரசரும், 21) விராட நாட்டரசரும், 22) மராட நாட்டரசரும், 23) நருநட நாட்டரசரும், 24) குரு நாட்டரசரும், 25) கலிங்க நாட்டரசரும், 26) சாவக நாட்டரசரும், 27) கூவிள நாட்டரசரும், 28) ஒட்டிய நாட்டரசரும், 29) கடார நாட்டரசரும், 30) காந்தார நாட்டரசரும், 31) குலிங்க நாட்டரசரும், 32) கேகய நாட்டரசரும், 33) விதேக நாட்டரசரும், 34) பூருமரபினரசரும், 35) கொல்ல நாட்டரசரும், 36) கலியான நாட்டரசரும், 37) தெலுங்க நாட்டரசரும், 38) கூர்ச்சர நாட்டரசரும், 39) மச்ச நாட்டரசரும், 40) மிரேச்ச நாட்டரசரும், 41) செஞ்சை நாட்டரசரும், முதலான பிறநாட்டு அரசர்களும், வழிகள் தோறும், நெருங்கி, பூமி மறையும்படி நெருங்கி வந்திருந்தனர்.

நிலமகளின் முதுகு ஒடிந்து விடுமோ என்று அச்சப்படும் வகையில், பல நாட்டு மன்னர்களும், எள்ளளவும் இடமில்லாத அளவிற்கு நெருங்கி இருந்தனர். கடலைப் போன்ற பரந்த சேனைகளை உடையவர்களாகிய இந்த மன்னர்கள் தங்களது நாட்டிலுள்ள பலவகையான வளங்களையும் எடுத்துக்கொண்டு வந்திருந்தனர். மதுரைக்கு வந்துசேரும் பல வழிகள் தோறும், கூட்டம் கூட்டமாக நெருங்கி மதுரைக்கு வந்தனர். திருமண முரசு அதிரும் பழமைவாய்ந்த பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரை நகரெங்கும், பாண்டிய மன்னனாகிய மலயத்துவசன் திருமகளான தடாதகைப் பிராட்டி என்ற மீனாட்சியம்மையின் திருமணத்திற்கு 41 தேசத்து அரசர்களும் மற்றும் பிற நாட்டு அரசர்களும் வந்திருந்தார்கள்.

திருக்கல்யாணம் முடிந்தபின், சிவபெருமான் **சுந்தர பாண்டியனாக "இம்மையே நன்மை நல்குமிறை"** எனப் பெயர் கொண்டு அரசர்களுக்கெல்லாம் அரசாட்சி செய்து காண்பித்தார்.

அதன்பின், பதஞ்சலி மற்றும் வியாக்ரபாத முனிவர்களின் வேண்டுகோளை ஏற்றுச் சிவபெருமான் **"வெள்ளியம்பலமாகிய மதுரையில் திருக்கூத்தாடினார்"**.

திருமண விருந்து

திருமணத்திற்கு வந்திருந்த விருந்தினர்கள் எல்லோரையும் விருந்துண்டு செல்லுமாறு அழைத்தனர். மதுரை தடாதகைப் பிராட்டியாரின் (மீனாட்சி அம்மன்) திருமணத்திற்கு வந்திருந்த முனிவர்கள், அரசர்கள் மற்றும் அனைவருக்கும் முறைப்படி அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

மலைபோல் குவிந்திருந்த மீத உணவு

முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும் அரசர்களும் மக்களும் வருகை என்பதால் அளவில்லாத அளவிற்குச் சமைக்கப்பட்டது. அதில் ஆயிரத்தில் ஒரு பங்கு

உணவு மட்டுமே செலவானது என்று சமையல்காரர்கள் வந்து கூறினர். மீதமிருந்த சோறும், காய் கறிகளும் இமயமலையைப் போலக் குவிந்து கிடந்தன.

இதைக் கேட்ட தடாதகைப் பிராட்டியார் தன் கணவராகிய சுந்தரபாண்டியர் திருமுன் சென்று வணங்கி, ஒருபுறம் ஒதுங்கிநின்று "தேவரீர்! முப்பத்து முக்கோடி தேவ கணங்களோடும் இங்கு எழுந்தருளுதலை நினைந்து இனிய சுவை பொருந்திய அமுது அளவின்றிச் சமைக்கப்பெற்று வீணே உலர்கின்றது. யாவரும் உண்டெஞ்சிய அன்னம் இமயமலையும் அதனருகிலுள்ள குன்றுகளும் ஒருங்கு சேர்ந்தாற்போலக் குவிந்து கிடக்கின்றது; கறிவர்க்கமும் அத்தன்மையதே" என்று கூறினார்.

பணிந்து ஒதுங்கிநின்று, அடிகள் முப்பத்து முக்கோடி
கணங்கள் தம்மொடும் இங்கு எழுந்தருள்வது கருதி,

இணங்கும் இன்சுவைப் போனகம் எல்லையின்றி ஆக்கி
உணங்குகின்றது, உண்டு எஞ்சியது என்னதென உரைக்கின்,
இமையக் குன்றமும் அடைகலாய் இதன்புறங் கிடந்த
சிமையக் குன்றுகள் ஈட்டமும் சேர்ந்து என நிமிரச்
சமையக் கொட்டிய வால்அரிப் புழுக்கலும் சாதத்திற்கு
அமையக் கொட்டிய கறிகளின் வருக்கமும் ஆகும்.



சிவபெருமானின் திருவிளையாடல்

இதைக் கேட்ட சிவபெருமான், தனது தேவியிடம் கொண்ட அன்பின் காரணமாகவும், குண்டோதரனின் வலிமையை உலகிற்கு உணர்த்தவும் ஒரு திருவிளையாடலை நிகழ்த்த எண்ணினார். சுந்தரபாண்டியன் சிரித்துக்கொண்டே, "தேவியே, நீ, உனது பெரும் செல்வத்தை நாங்கள் அறியும் வண்ணம் இவ்வாறு சமைத்துள்ளாய். ஆனால், உன் விருந்தை உண்பதற்குப் பசியுடன் இருப்பவர்கள் யாரும் என் கூட்டத்தில் இல்லை" என்று கூறினார். பின்னர், தனது குடையைத் தாங்கி நிற்கும் குண்டோதரன் என்ற சிறிய பூதத்தின் வயிற்றில் 'வடவைத் தீ' எனப்படும் கொடிய நெருப்பு புகுமாறு செய்தார். இதனால் நஞ்சு உண்டவனைப் போல் கடும் பசி கொண்டு குண்டோதரன் துடித்தார். சிவபெருமான் பிராட்டியாரிடம் "இவனுக்கு ஒரு பிடி சோறு கொடு" என்று கூறி அனுப்பி வைத்தார்.

'குண்டம்' என்றால் “நெருப்புக் குண்டம், யாககுண்டம்” என்றும், 'உதரம்' என்பது வயிறு என்றும் பொருள்படும். அதாவது, குண்டோதரன் என்றால் **"நெருப்புக் குண்டம்**

போன்ற வயிற்றை உடையவன்" என்று பொருள். இந்தப் பூதத்தின் வயிற்றில் போடப்படும் எல்லாமும் எரிந்து, நெருப்பு வளர்ந்து, மென்மேலும் பசி கூடிக்கொண்டே செல்லும் என்பதே இந்தப் பெயரின் பொருளாகும்.

அனைத்தையும் விழுங்கிய குண்டோதரன்

மலைபோல் குவிந்திருந்த சோற்றை கண் இமைக்கும் நேரத்தில் குண்டோதரன் தின்று தீர்த்ததைக் கண்ட உணவு பரிமாறும் பெண்கள்,அச்சமும் ஆச்சரியமும் அடைந்தனர். சோறு மட்டுமின்றி, பல வகையான கறிகள், பால், தயிர், நெய், தேன், பழங்கள், இனிப்புகள், கரும்பு மற்றும் பச்சைக் காய்கறிகள் என அங்கிருந்த அனைத்தையும் அண்டா அண்டாவாக வாரி உண்டான். நெய் ஊற்ற ஊற்றக் கொழுந்துவிட்டு எரியும் யாகத் தீயைப் போல, குண்டோதரன் வயிற்றில் இருந்த வடவைத் தீயானது அடங்காமல் மேன்மேலும் அதிகரித்தது. இதனால் குண்டோதரனுக்கு மேலும் அதிகமாகப் பசியெடுத்தது. பசி பொறுக்காமல் துடித்தான்.

வியப்பில் ஆழ்ந்த தடாதகைப் பிராட்டியார்

இந்தக் காட்சியைக் கண்ட தடாதகைப் பிராட்டியார் ஆச்சரியத்துடன், வெட்கத்தால் தலைகுனிந்து சிவபெருமானிடம் திரும்பி வந்தார். சிவபெருமான் ஒன்றும் அறியாதவர்போல, "இன்னும் உணவு மீதமிருந்தால் மேலும் சில பூதங்களை அனுப்புகிறேன்" என்று கூறினார். அதற்குப் பிராட்டியார், "குண்டோதரனுக்கே இன்னும் பசி அடங்கவில்லை. பிற பூதங்களையும் அனுப்பினால் அவர்கள் உலகத்தையே தின்றுவிடுவார்கள்; அதனால் உங்களுக்கு உலகை அழிக்கும் **'கால ருத்திரர்'** என்ற பெயர் வந்துவிடும்" என்று பணிவுடன் கூறினார்.

பசியால் கதறிய பூதம்

அங்கிருந்த உணவு முழுவதையும் உண்ட பிறகும் பசி அடங்காத குண்டோதரன், சுந்தரபாண்டியனிடம் ஓடி வந்தான். "இமயமலைப் போல் இருந்த உணவை உண்ட பின்பும் என் கொடிய பசி தீரவில்லை. முற்பிறவியில் தருமம் செய்யாதவர்களின் வயிறு வறுமையால் எப்படி எரியுமோ, அப்படி என் வயிறு எரிகிறது. திரிபுரத்தை எரித்த தீயே என் வயிற்றில் பசியாக வந்து புகுந்துவிட்டதா?" என்று கூறி வருந்தினான். பசி தாங்க முடியாமல் கைகளை ஒன்றோடொன்று தட்டிக்கொண்டும், பெருமூச்சு விட்டும், அண்டங்கள் அதிரும்படி கதறி அழுதான்.

பசியால் துடிதுடித்துக் கொண்டிருக்கும் பூதத்தைக் கண்டு எல்லா உயிர்களுக்கும் படியளக்கும் பரமேசுவரன் என்ன செய்தார்?

அடுத்து வரும் இதழில் காண்போம். குருவருளால் திருவருள் பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்.

அன்பன்
காசிஶ்ரீ முனைவர் கி.காளைராசன்,
துணைப்பதிவாளர்(பணி ஓய்வு),
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.